**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 126** **நாள்: 31.08.2018**

**சொத்து வரி சீராய்வு தொடர்பான சுய மதிப்பீட்டு விவர படிவத்தை தாக்கல் செய்வதற்கு 16.09.2018 வரை கால நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட சொத்து உரிமையாளர்கள் சொத்து வரி சீராய்வு தொடர்பான சுய மதிப்பீட்டு விவர படிவத்தை தாக்கல் செய்ய **31.08.2018** அன்றே கடைசி தினமாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், பல்வேறு பகுதிகளில் உள்ள சொத்து உரிமையாளர்களாலும், இதர மாவட்டங்கள், வெளியூர்களில் வசிக்கும் சொத்து உரிமையாளர்களாலும் சொத்து வரி விவர அறிக்கை தாக்கல் செய்ய கால அவகாசம் கோரி கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளதால், சொத்து உரிமையாளர்கள் கோரிக்கையினை ஏற்று, சொத்துவரி விவர அறிக்கையினை ஏற்கனவே தெரிவிக்கப்பட்ட அனைத்து வழிமுறைகளின்படி தாக்கல் செய்ய ஏதுவாக வரும் **16.09.2018** அன்று வரை காலம் நீட்டிக்கப்படுகிறது.

எனவே, சொத்து விவர சுய மதிப்பீட்டு அறிக்கையினை (Self Declaration Form) தாக்கல் செய்யாத சொத்து உரிமையாளர்கள், மேற்படி நீட்டிக்கப்பட்ட கால அவகாசத்தை தவறாமல் பயன்படுத்தி, தங்களது சொத்து விவர சுய மதிப்பீட்டு விவர அறிக்கையினை உரிய படிவத்தில் (Self Declaration Form) பூர்த்தி செய்து, சம்மந்தப்பட்ட அலுவலகங்களில் வழங்கியோ அல்லது இணையதளம் மூலமாகவோ **16.09.2018**க்குள்ளாக சமர்ப்பிக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**